# NAMATHU EELANADU E-PAPER-MARCH-2026




[Eelanadu 03]

# NAMATHU EELANADU E-PAPER-DECEMBER-2025



# NAMATHU EELANADU E-PAPER-NOVEMBER-2025



# [illegible] [illegible] [illegible]




உலகலாவிய ரீதியில் மாவீரர் தினம் மிகவும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற நிலையில் பிரித்தானியாவிலும் (UK) இந்நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரித்தானியாவின் ஒக்ஸ்போட் நகரில் அமைந்துள்ள உலகத்தமிழர் வரலாற்று மையத்திலலும் பிரித்தானிய மத்திய லண்டனில் உள்ள Excel அரங்கிலும் மாவீரர் நாள் நினைவுகள் மிகவும் உணர்ச்சி பூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.




2025
EXCEL - LONDON







---

# NAMATHU-EELANADU-E-PAPER-OCTOBER-2025




# NAMATHU-EELANADU-E-PAPER-SEPTEMBER-2025


நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 06 மலர் 63 செப்டெம்பர் 2025 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com
Simply Scan the QR code Your Phone Camera
Download the NamathuEelanadu app
திலீபனின் தியாகம் இந்திய மாயையைக் கலைத்தது. தமிழீழ தேசிய உணர்வைத் தட்டியெழுப்பியது.
- தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்


10

# ?????? ???????????? ???????????? ??? ??????????



சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நினைவு நாளினையொட்டி பிரித்தானிய பிரதமர் கீரஸ்டாமருக்கு இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஈழத்தமிழ் மக்களுக்கான நீதியினை வழங்கக்கோரியும் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ , கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ஏனைய தமிழ் மக்களுக்கு எதிரான அநீதியிழைத்தவர்களுக்கான தடையினை நீடிக்குமாறும் சர்வதேச விசாரணையை ஆதரிக்கும் விடயங்களான ஐ.சி.சி பரிந்துரை மற்றும் ஐ.நா விசாரணையை ஆதரிக்க ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் உண்மை நீதி மற்றும் அவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்படுவதை உறுதிசெய்யக்கோரியும் மனு கையளிக்கப்பட்டது .

இந்த மனுவை இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நாடு கடந்த உறவினர்கள் சங்கம் – ஐக்கிய ராஜ்ஜியம் (AEREDSL-UK) இனால் ஏற்பாடு செய்யப்பட்டபடி சிறிலங்கா இராணுவத்தின் திட்டமிடப்பட்ட சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் (AEREDSL-UK) ன் உறுப்பினர்கள் என கையொப்பமிடப்பட்ட குறித்த மனுவினை அனுசன் பாலசுப்ரமணியம் , ஆரங்கன் ஜெயக்குமார் , பவசுதன் உதயராசா , விதுசன் கணேச மூர்த்தி , மேகலக்சன் சந்திர பர்மன் , நிலானி சந்திர பர்மன் , ஆகிய செயற்பாட்டாளர்கள் கையளித்திருந்தனர்

மனுவின் முக்கிய கோரிக்கைகள் பின்வருமாறு

1. மகிந்தராஜபக்ஷ , கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ஏனைய தமிழ் மக்களுக்கெதிரான அநீதியிழைத்தவர்களுக்கான தடையை ஐக்கியராஜ்ஜியம் நீடிக்க வேண்டும்.

2. சர்வதேச விசாரணையை ஆதரிக்கும் விடயங்களான ஐ.சி.சி பரிந்துரை மற்றும் ஐ.நா விசாரணையை மேற்கொள்ள ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

3.பாதிக்கப்ட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் உண்மை , நீதி மற்றும் அவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் .

மனுவில் மேலும் பிரித்தானிய அரசாங்கம் ஏற்கனவே சில இலங்கை அதிகாரிகளுக்கு விதித்துள்ள தடைகளுக்கும் அண்மையில் இராணுவ தளபதி சவேந்திர சில்வாவிற்கான தடை விதித்தமை குறித்தான பாராட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பல அநீதியிழைத்த முக்கிய தலைவர்கள் இன்னும் தண்டனைக்கு உட்படுத்தப்படாத நிலையில் விரிவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக்கோரப்பட்டது.

இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நாடு கடந்த உறவினர் சங்கம் ஐக்கிய இராச்சியம் (AEREDSL-UK) இதுவரை ஐ.நா மற்றும் சர்வதேச விசாரணைகளுக்கு ஆதாரங்களை வழங்கி வரும் நிலையில் இந்த நடவடிக்கை முக்கய முயற்சியாக கருதப்படுகிறது .


10

# ???????????? ???????? ?????????????????
# ??????????? ????????????? ?????




நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கோடைகால விளையாட்டு பிரித்தானியாவில் வெகு விமரிசாயக நடைபெற்றது

தியாக தீபம் லெப் கேணல் திலீபன் அவர்களின் நினைவாக பிரித்தானிய நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஆண்டுதோறும் நடாத்தும் கோடைகால விளையாட்டு விழாவின் 2025 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழா நேற்யைதினம் பிரித்தானியாவில் இடம்பெற்றது.

இதில் பிரித்தானியாவிலுள்ள புலம்பெயர் தமிழர்களும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாட்டாளர்களும் பெருமளவில் பங்கேற்றனர். உதைபந்தாட்டம் வலைபந்தாட்டம் மற்றும் தமிழர் விளையாட்டுக்கள் இடம்பெற்றதுடன் தமிழர் உணவுப்பண்டங்களும் பரிமாறப்பட்டன.


கோடைகால
TGTE






---

# NAMATHU-EELANADU-E-PAPER-AUGUEST-2025


நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 06 மலர் 62 ஆகஸ்ட் 2025 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com
Simply Scan the QR code Your Phone Camera
Download the NamathuEelanadu app
போராட்ட வடிவங்கள் மாறலாம் ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை.
- தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்
Krishanthy Kumaraswamy


10




தமிழர் தாயக நிலப்பரப்பில் ஸ்ரீலங்கா ராணுவப் பயங்கரவாதத்தால் தொடர்ச்சியாக எம் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்ற பேரவலம் குறித்தும், அரச படைகளால் ஏற்கனவே நிகழ்த்தப்பட்டு தற்போது தொடர்ச்சியாக மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டுக்கொண்டிருக்கும் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பிலும் கரிசனை எடுத்து, ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் மீது தமது ராஜதந்திர ரீதியிலான அழுத்தங்களை பிரித்தானிய அரசாங்கம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை மனு ஒன்றை எமது “தமிழீழ சுயநிர்ணய அமைப்பு” 15/08/2025 வெள்ளிக்கிழமை பிரித்தானிய பிரதமர் அலுவலகத்தில் கையளித்தது.

பல தசாப்தங்களாக தமிழர் தாயகத்திலும், ஸ்ரீலங்காவின் தலைநகரிலும் எம் மக்கள்மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும், பாலியல் வன்கொடுமைகளுக்கும் எதிரான விசாரணைகளுக்காக இதுவரை சர்வதேச நீதிப்பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவில்லை. அதேவேளை, தமிழர்கள் மீதான வன்கொடுமையின் 'கறுப்பு ஜூலை' என்று நினைவுகூரப்படுகின்ற காலப்பகுதியின் நீட்சியையும், எதிர்வரும் 'சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நாள்' பேரெழுச்சியையும் கருத்தில்கொண்டு இந்தக் காலப்பகுதியில் பிரித்தானியப் பிரதமருக்கான மனு கையளிப்பினை எமது அமைப்பு மேற்கொண்டது.

பிரித்தானியாவின் தற்போதைய ஆளும் கட்சியான லேபர் அரசாங்கமானது தமது தேர்தல் வாக்குறுதிகளில் மிக முக்கியமான ஒன்றாக, எம் தமிழர் தாயக நிலப்பரப்பில் எம் மக்கள் மீது ஸ்ரீலங்கா பௌத்த பேரினவாத அரசபடைகளால் நிகழ்த்தப்பட்ட மனிதப் பேரவலம் குறித்து சர்வதேச நீதிப் பொறிமுறைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரிவித்திருந்தது. அந்தவகையில், ஸ்ரீலங்கா அரசின் ராணுவத் தளபதிகளாகச் செயற்பட்ட போர்க்குற்றவாளிகளான சவேந்திர சில்வா உட்பட்ட ஒரு சிலர் மீது பிரித்தானியா அண்மைய காலத்தில் தடையும் விதித்துள்ளது. அத்துடன், தற்போதைய பிரித்தானியப் பிரதமரான கெய்ர் ஸ்டார்மர் ஒரு மனித உரிமைகள் சட்டத்தரணியாக பணியாற்றியவர் என்பதனால் எமது மக்களின் வலியையும், எமக்கான நீதிக் கோரிக்கையையும் அவரால் தெளிவாகப் புரிந்துக்கொள்ள முடியும் எனவும் நாம் எதிர்பார்க்கின்றோம் என்பதனையும் இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேவேளை, எமது இந்த மனு கையளிப்பிற்கு முன்னதாக, பிரித்தானியா பிரதமர் அலுவகத்திற்கு முன்னால் புலம்பெயர்வாழ் எம் உறவுகள், எமது அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என நூற்றுக்கணக்கானோர் ஒன்றுகூடி சர்வதேச நீதிவிசாரணையை வலியுறுத்திய போராட்டம் ஒன்றினை பிற்பகல் 2:00 மணியளவில் மேற்கொண்டிருந்ததுடன், போராட்ட இறுதியில் தமிழீழ சுயநிர்ணய அமைப்பின் தலைவர் முனைவர்.சொக்கலிங்கம் யோகலிங்கம், செயலாளர் முனைவர். அருணாச்சலம் ராஜலிங்கம் மற்றும் ஊடகச் செயலாளர் ராகவன் கணேசமூர்த்தி ஆகியோர் பிரித்தானியப் பிரதமருக்கான மனுவை அவரது அலுவலகத்தில் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.


Recognise our right to self-determination in Tamileelam...
MASS GRAVES INVESTIGATION
UNDER THE SUPERVISSION OF UNHRC
PROTEST AGAINST
CHEMMANI TAMIL GENOCIDE


செம்மணி மனிதப் புதைகுழி போராட்டம்
CHEMMANI MASS GRAVES INVESTIGATION
UNDER THE SUPERVISSION OF UNHRC
A CALL FOR JUSTICE UNITY
PROTEST AGAINST
@AnushanBalasubramaniam

# NAMATHU-EELANADU-E-PAPER-JULY-2025



# NAMATHU-EELANADU-E-PAPER-JUNE-2025

